திருசிற்றம்பலம்

# <u>எறிபத்த நாயனார்</u>




எம்பிரான் இட்டக் கட்டளைப்படி தம்பிரான் தோழன் எனப்பெறும் நம்பி ஆரூரன் தம் தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகையின் இரண்டாவது பாடலில் முதலில் தொடங்குவது இலைமலைந்த வேல் நம்பி எறிபத்தர்க்கடியேன் என்பதாகும். (இலைமலிந்த வேல் : கூர்மையான் மழுப்படையினைக் கொண்டு எறியும் வீரமிக்கவர்).

மிகப் பெருமையாய் விளங்கப் பெறும் நகரம் கருவூரானது, இமயமலையின் மீது புலிக்கொடியைப் பறக்கவிட்ட சோழப்பரம்பரையில் கரிகாலன் முதல் அநபாயன் வரை நீடியபகழ் தேடிய தலை நகரங்களில் ஒன்றாகும் நிலையான சிறப்பினால் மிக்க வளமைகொண்ட தலை நகரமாக விளங்கியது.மன்னிய சீர் இந்நகரில் துன்னிய அன்பின் மிக்க தொண்டர்தம் சிந்தையில் உறையும் அரனார் அமர்ந்திருக்கும் ஆலயம் திருவானிலை என்ற சிறப்புப் பெற்ற கோவிலாகும்.

இந்நகரில் சிவனடியார்களுக்கு அரிய தொண்டினைச் செய்துவரும் ஒரு பெருந்தகை வாழ்ந்து வந்தார், அவரை எறிபத்த நாயனார் என்று உரைப்பர். சிவனடியார்களுக்கு தீங்கு எவ்வகையில் வரினும் சீறிப்பாயும் சிங்கம் போல் வந்து மழு என்ற படைக்கலத்தால் இடர்களையும் எந்தல் அவர்.

இங்கனம் எறிபத்தர் சிவநெறி மேற்கொண்டு ஒழுகிவந்த காலத்தில் சிவகாமி ஆண்டார் என்னும் புண்ணிய முனிவர் பூப்பறித்து அலங்கல்சாத்தி, உண்ணிறை காதலோடு திருவானிலை ஆலயம் உறை இறைவனாருக்கு தொண்டுகள் செய்து வாழ்ந்து வந்தார். ஒருநாள் வைகறை துயிலெழுந்து நீராடி, வாயைக் கட்டிக் கொண்டு கொத்து கொத்தாக மலர்பறித்து கோலப்பூங்கூடைதன்னை நிறைந்துக் கொண்டு இறைவனின் திருக்கோயிலை நோக்கி நடந்து சென்றார். சோழமன்னன் புகழ்சோழநாயனாரின் பகைமுடிக்கும்"பட்டவர்தனம்" என்ற பெயர்கொண்ட வேழம்(யானை)கோலம் பெருகும் நவமியின் முன்னாளில் ஆம்பிராவதி ஆற்றில் நீராடி விழாக்கால நிற்பவர்களின் விழிகள் அச்சத்தால் விரியும் வண்ணம் வந்து கொண்டிருந்தது.

மதநீர் ஒழுக இறுமாந்து நடந்து வந்த யானை, அங்கே சென்று கொண்டிருந்த சிவகாமி ஆண்டாரின் கையிலிருந்த இறைவனுக்கு அலங்கல் சாத்தும் மலர்கள் நிறைந்த கோலப்பூங்கூடையைப் பறித்து வீசியது. பூக்கள் சிதறின. யானையின் மீதிருந்த பாகர்கள் காற்றைவிட வேகமாக களிற்றை நடத்தி அகன்றனர். கலைந்த பூக்களைக்கண்டு நிலை குலைந்த சிவகாமி ஆண்டார் தம் கையில் கொண்டிருந்த தண்டால் அடிக்க விரைந்தார். ஆனால் யானை விரந்து சென்று அகன்றது முதுமை காரணமாக மிக விரைவாகச் செல்ல இயலாத முனிவர் தரையில் வீழ்ந்து பின் எழுந்து மிக்கச் சினம் கொண்டமையால் "சிவதா" என் ஓலமிட்டார் (சிவதா என்பது சிவனை கூவி அழைக்க ஓலமிடுதல்).

"மதயானையின் தோலைப்போர்த்தியவனே கங்கைச் சடைமுடியானே, மார்க்கண்டனுக்கு அடைக்கலம் கொடுத்துக் காத்தவனே, கரிய காலனை வென்றவனே இந்தக்கரியின் செயலால் அரிய எம்தொண்டு தடைபடுவதோ என்று பலவாறாக ஓலமிட்டு 'சிவதா' 'சிவதா' என்று கதறினார். எதிரே வந்துகொண்டிருந்த எறிபத்தர் இதனைக் கேட்டார்.வெகுண்டெழுந்து, மன்றில் ஆகும் நடராசப்பெருமானின் உண்மைத்தொண்டருக்கு ஒரு யானையே பகையானலும் நான் அதனை அழிப்பேன் என்று சினந்து கூறி, நிலைகுலைந்த அடியாரின் நிலையைக் கண்டு வருந்தி அவரை வணங்கி யானை எங்கு சென்றது என்று வினவினார். இத்தெருவழியாகவே சென்றது என்று சிவகாமிஆண்டாரின் பதிலைக்கேட்டு, மிகவிரந்து சென்று கரியை எதிகொள்ளும் அரிமாபோல் யானையிடம் வந்தார். இந்த யானையானது முன்பு எம்பெருமான் தோலுரித்துக் கொன்ற யானையைப் போன்றதாகும். தேவர் உட்பட யார் தடுத்தாலும் இக்கரிய யானையைத் துண்டித்துக் கொல்வேன் என்று ஆர்ப்பரித்து தம் வீரமிக்க மழுவை வலக்கையால் வீசினார். திரும்பிய யானை எறிபத்தர் மீது வெறிக்கொண்டு பாய எத்தணித்தது. தாயன்பின்முன் அச்சம் எதிர்த்து நிற்க இயலுமோ, வேல்நம்பி எறிபத்தர் வேழமதின் தும்பிக் கையை வெட்டிவீழ்த்தினார்.

கரிய மலைபோன்ற யானை கடல்போல கதறிவீழ்ந்து புரண்டது. யானையின் மீதிருந்து பாகர் இருவரும், யானையின் மருங்கில் வந்த குத்துக்கோல் பாகர் மூவரும் ஆக ஐந்து பாகர்களும் எறிபத்தரால் துண்டாடப்பட்டனர்.

வெட்டுண்ட பாகர்கள் ஒழிய மற்றுளார் ஓடிச்சென்று மன்னனுக்குத் தெரிவிக்கின்றனர். செய்தி கேட்ட மன்னன் சினம் மிகவும் கொண்டான் எதிரிலா படைதிறத்தாலும் , வீரத்தாலும் மலிந்த மன்னன் யாரிதனைச் செய்தார் என்று கூட வினவாது உடனே அரண்மனை நீங்கிவந்தான். தந்திரத் தலைவரான மந்திரிகள் உடனே படைகள் எழுந்து வருமாறு பறை சாற்றினர். வில்லொடு வேலும், வாளும் தண்டும் மிண்டி பாலங்களும் , வன்மையான இருப்புலக்கைகளும், சக்கரங்கள், மழு, சூலங்கள் தரித்தவர்களாய் உலகையழிக்க வந்த ஊழிக்காற்றாய் படைகள் பின் தொடர சோழ வேந்தனும் அரச மாவீதியில் சென்றனன். நிகழ்விடத்தை நெருங்கிய மன்னன் கண்டகாட்சி அவனை வியப்பில் ஆழ்த்தியது. மழுவேந்திய கையுடன் மதம் பொழியும் யானை போன்று அடியார் ஒருவர் நிற்பதைக் கண்டான். கங்கைச் சடையோனை இதயத்தில் தாங்கும் இவ்வடியார் இவ்வடாத செயலைச் செய்திருக்க மாட்டார் என்று நினைத்தே வென்றவர் யார் என்று வெடிபட முழக்கம் செய்தான். உடன் நின்ற பாகர்கள் மாலைசூடிய மன்னவனே அத்தீங்கைச் செய்தவர் மழுவேந்தி முன்னால் நிற்கும் இவ்வடியவரே ஆவார் என்றனர்.

குழையணிந்த காதுகளுடைய இறைவன்பால் குன்றாத அன்பு நிறைந்த இவ்வடியார் உரிய பிழை ஏதும் நிகழ்ந்திருக்காவிடின் பெரிய கொலை செய்திருக்க மாட்டார் என்று எண்ணலுற்றான். தொடர்ந்தவர்களை தொலைவில் நிறுத்தி, அடியாரைத் தனியே வணங்கி நிகழ்ந்து விட்ட கொடுமைக்கு இந்தத் தண்டனை போதுமோ என்று வினவினான். வினா எழுப்பிய மன்னனைப் பார்த்து விடைப்பாகர் எம்பெருமான் மீது ஈடிலா பக்தி கொண்ட எறிபத்தர் "சோழனே ! சிவகாமி ஆண்டார் எனும் அடியார் இறைவனுக்குச் சாத்தும் பொருட்டுக் கொண்டு வந்த திருப்பள்ளித்தாமத்தை இந்த யானை பறித்து வீழ்த்தியதால் அதனை நிலத்தில் விழுமாறு துண்டித்து வீழ்த்தினேன். இப்பெரியத் தீங்கினை இந்த யானை செய்யும் போது அதனைச் செலுத்திய பாகர்கள் எவ்வகையிலும் அந்த யானையை விலக்காது இருந்தமையால் அவர்களையும் வீழ்த்தினேன்" என்றார்.

இது கேட்ட மன்ன்ன் "சிவபெருமானின் அடியவருக்குச் செய்த இந்த அபச்சாரத்திற்கு இத்தண்டனைப் போதுமானதன்று. என்னையும் கொல்லவேண்டும். மழுவால் கொல்வது வழக்குமன்று" என்று தமது செங்கையால் இடையில் கொண்ட உடை வாளை ஏந்தி எறிபத்தர் கையில் கொடுத்தான். வெந்தழற் போலும் சுடர் வாளை நீட்டிய மன்னனைப் பார்த்து எறிபத்தர்

"ஓ! நான்கெட்டேன். அந்தமில்லா அன்பு கொண்ட மன்னனின் அளவிலா அன்பின் எல்லையில்லாத் தன்மையை நான் கண்டு கொண்டேன்" என்று உளம் நொந்தார். உருவிய வாளை வாங்க மறுத்தால் தன்னையே மாய்த்துக் கொள்ளவும் தயங்கமாட்டான் என்று கருதி வளைக் கையில் ஏந்தினார். வாளைப் பெற்றுக் கொண்ட எறிபத்தர் முன்பு பணிந்து நின்ற மன்னன் "என் வாளால் எனைக் கொன்று என் பிழைதீர்க்கும் வண்ணம் பேருதவி செய்யும் பேற்றை இவரிடம் நான் பெற்றேன்" என்று எண்ணினான்.

எறிபத்தரோ யானையையும் , பாகர்களையும் கொன்ற தன்னை விடுத்து, என்னையும் கொல்லவேண்டும் என்று சொல்லுகின்ற இம்மன்னனைல்லவோ உண்மையடியார். இவர் மனம் கோண பிழை செய்த நானே மடிவது சிறந்தது என்று நினைந்து மன்னன் தந்த வாளைத் தன் கழுத்தில் வைத்து அரியத் தொடங்கிய போதில் மன்னன் பதை பதைத்து " இப்பெரியோர் செய்கை இவ்வாறனது என்ன? ஓ! நான் கெட்டேன் என்று பதறி தனது வலிமை மிக்கத் தோள்களால் கூடி, அந்த வாளையும் அதனைப் பற்றியக் கரத்தையும் சேர்த்துப் பற்றிக்கொண்டான். தம்மை இச்செய்கையினின்றும் தடுத்த மன்னனை நோக்கி வருந்தி நின்றார் எறிபத்தர். அப்போது நஞ்சணிந்த கண்டன், கண்மூன்று கொண்டான் எம்பிறானருளால் வானத்திலிருந்து பலரும் கேட்கும் படி எழுந்து பரவியது ஒரு திருவாக்கு "யாவரும் தொழுகின்ற அன்பினால் மிக்கவர்களே! எல்லையில்லாத உங்கள் அன்பின் வெளிப்பாடு இவ்வவனி முழுதும் அறியச் செய்யவே திருபள்ளித்தாமத்தை யானையொன்று சிதறி அதன் மூலம் யானையும் , பாகர்களும் மரணம் மேற்கொண்ட நிகழ்ச்சி பிறையை அணிந்த இறைவன் அருளால் நேர்ந்தது " ஓங்கிய இக்குரல் ஒலித்தவுடனேயே யானையும் பாகர்களும் உயிர்பெற்று எழுந்து நின்றனர்.

தமது கழுத்தை அரிய வைத்த வாளை எறிந்து விட்டு எறிபத்தரும் சோழவேந்தன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்.சோழமன்னன் எறிபத்தர் எனும் எல்லையில்லா திருநீற்றின் பெருமையைக் கொண்ட அடியாரின் அடிவீழ்ந்து வணங்கினான். இத்திருக்காட்சியைக் கண்ணுற்ற விண்ணோர்கள் பனிமலர் சொரிந்து வாழ்த்தினார். அருமறைப் பொருளாயுள்ள பெருமான் திருப்பள்ளிதாமம் சுமந்த கோலப்பூங்கூடையை மலர்களால் நிறைத்தனர். சிவகாமி ஆண்டாரும், சிவப்பெருமான் செயலால் மகிழ்ந்து நின்றார்.

எறிபத்தரும் மன்னனை அணுகி "அடியேன் பார்த்து மகிழும்படி பெரிய இந்த யானையின் மீது ஏறியமர்ந்து உங்கள் அரண்மனைக்கு எழுந்தருள் வீராக " என்று வேண்டினார். அவரது அன்பு கட்டளையை ஏற்றுக்கொண்டான் மன்னன். குதிரையில் வந்த மன்னன் எறிபத்தரை வணங்கி வெண்கொற்றக் குடையின் நிழலில் யானை மீது ஏறிச் சென்றான். தம்பிரான் பணியை மேற்கொள்ள சிவகாமி ஆண்டாரும் ஆலயம் சென்றார். மன்னனுடன் வந்த படைகளும் ஏழுகடல்கள் ஆர்ப்பரித்தது போல வாழ்த்தொலி எழுப்பி புறப்பட்டனர்.

உலகத்தார் யாவரும் மகிழ்ச்சியுடன் வாழ்த்தொலி எழுப்பினார். எங்கெல்லாம் அடியார்களுக்கு இடையூறு ஏற்படுவதாயின் அங்கு கடிது சென்று அவர் துயர் துடைக்கும் அரும்

பணியை சிரமேற்கொண்டு தொடர்ந்து செய்து வந்தார் எறிபத்தர். இங்ஙனம் இந்நற்றவக் கொள்கையை மேற்கொண்டு செய்து வந்து, முடிவில் திருக்கயிலை சேர்ந்து கொற்றவர் கணங்களின் கணநாயகத் தலைமை பெற்றார்.

சிவாயநம

தேனாரும் தண்பூங் கொன்றைச்

செஞ்சடையவர் பொற்றாளில்

ஆனாத காதல் அன்பர் எறிபத்தர்

அடிகள் சூடி வாழ்த்துவாம்... (சேக்கிழார் சுவாமிகள்).

திருச்சிற்றம்பலம்.